**வ/ப மகாவலி கன்சல்ரன்சி பியூரோ (தனியார்) கம்பனி - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப மகாவலி கன்சல்ரன்சி பியூரோ (தனியார்) கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 11.21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்களுக்கு ஏதேனும் சேதமொன்று ஏற்பட்டிருப்பின் அதற்காக இழப்பு நட்டம் இணங்காணப்பட வேண்டும். இருப்பினும் ரூபா 12,627,290 ஆன பெற வேண்டிய மீதியில் ரூபா 5,703,194 ஆன 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி காணப்பட்ட போதிலும் அதில் அறவிட முடியாக் கடன் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு மதிப்பீடு செய்யப்பட்டு இழப்பீட்டு நட்டங்களுக்கான ஒதுக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | நியமத்தின் பிரகாரம் அறவிட முடியாக் கடன் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு மதிப்பீடு செய்யப்பட்டு இழப்பீட்டு நட்டங்களுக்கான ஒதுக்கங்கள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 14,343,803 கிரயமான 51 நிலையான சொத்து விடயங்கள் கம்பனியால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அவற்றின் நியாயமான பெறுமதியை சமர்ப்பிப்பதற்காக சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | நியமத்தின் பிரகாரம் கம்பனியால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக தேய்மானமிடப்பட்ட நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தின 29.2 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிக்கு உரிய வருமான வரிச் செலவுகள் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருடத்திற்கான வருமான வரி கணக்கீடு மற்றும் தேவையான வெளிப்படுத்தல் நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 3.3.2.4 இன் கீழ் மற்றும் இலக்கம் 04 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் கம்பனிக்கு உரிய வருமான வரிச் செலவுகள் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத ரூபா 611,866 ஆன வரிப் பொறுப்பொன்று காணப்பட்டு வருவதுடன், அதன் இருப்பு தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | மீதி உறுதிப்படுத்தல்களுடன் தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய மீதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 5 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 5,703,194 ஆன 9 மீதிகள், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 3,135,933 ஆன 03 மீதிகள் தொடர்பான மீதி உறுதிப்படுத்தல்கள் அல்லது ஏனைய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், அவை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட.டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படவில்லை. அனைத்து பெற வேண்டிய மீதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட நிறுவனங்கள் மீதிகளை உறுதிப்படுத்தி எமக்கு அனுப்பவில்லை. 8 வருடங்கள், 5 வருடங்கள் மற்றும் 3 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ரூபா 1,960,961 ஆன தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்திருந்ததுடன் இத்தொகை ஏற்கனவே பொது திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படுள்ளதால் அதைப் பெற்றுக்கொள்வதற்கு நேரம் எடுக்கும். | மீதிகள் உறுதிப்படுத்தப்படுவதற்கு தேவையான அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.குறிப்பிட்ட மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் இலங்கை மகாவலி அதிகார சபையிடமிருந்து அறவிட வேண்டிய மீதியொன்றாக ரூபா 1,319,471 காட்டப்பட்டிருந்தும் இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் கம்பனிக்குப் பெற வேண்டிய மீதிகள் எதுவும் காட்டப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படவில்லை. கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மகாவலியிடமிருந்து அறவிட வேண்டிய மீதி தொடர்பாக அதிகார சபையால் இன்றும் உறுதிப்படுத்தலொன்று பெறப்படவில்லை. | இலங்கை மகாவலி அதிகார சபையிடமிருந்து குறிப்பிட்ட மீதி தொடர்பாக விசாரித்து உறுதிப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நி.பி. 387 | காசோலைகள் மூலம் கொடுப்பனவு செய்யப்படும் போது வங்கி மீதி போதுமானதாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டியதுள்ளதுடன் எந்தவொரு அரச வங்கி கணக்கிலும் மேலதிகப் பற்று இருத்தல் கூடாது எனினும், 2022 ஆம் வருடத்தில் சனவரி, பெப்ரவரி, யூன், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கம்பனியின் காசேட்டில் முறையே ரூபா 243,194, ரூபா 68,024, ரூபா 215,580, ரூபா 215,580 மற்றும் ரூபா 215,580 ஆன மறை மீதிகள் காணப்பட்டன. | அவதானிப்புடன் உடன்படவில்லை. 2022 ஆம் வருடத்தில் சனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரு மாதங்களில் மட்டுமே மறைப் பெறுமதியொன்று காணப்பட்டது. | நடைமுறைக் கணக்கில் போதுமான மீதியொன்று காணப்படுவதை உறுதி செய்ததன் பின்னர் காசோலை எழுதப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டிக்கோவை | | | |
| | (i) 2.2.2 (அ) பந்தி | பணிப்பாளர் குழுவின் தலைவரால் குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒருமுறை பணிப்பாளர் சபை கூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் மட்டுமே நடாத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | குறைந்தபட்சம் மாதத்திற்கு ஒருமுறை பணிப்பாளர் சபை கூட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ை) 4.2 ஆம் பந்தி | கணக்காய்வுக் குழுவொன்று நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வுக் குழுவொன்று நிறுவுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கைநூல். | | | |
| (ை) 3.2 ஆம் பந்தி | அனைத்து பொது முயற்சிகள் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் ஊதிய அமைப்பு என்பன பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரைகளுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியின் பதவியணி, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொடுப்பனவு நடைமுறை என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட வேண்டும். |
| (ை) 6.6 ஆம் பந்தி | ஆண்டறிக்கை கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் 2018 ஆம் வருடம் முதல் 2021 ஆம் வருடம் வரையான ஆண்டறிக்கைகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியின் ஆண்டறிக்கை குறிப்பிட்ட காலப்பகுதியில் பராளுன்றத்தால் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,430,563 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 7,284,205 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,714,768 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. சேவைக்கிரயம் ரூபா 9,492,581 ஆல் அதிகரித்தபோதிலும் , மதியுரை சேவை வருமானம் ரூபா 21,766,427 ஆல் உயர்வடைந்தமை செயற்பாட்டு விளைவுகளின் இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியால் 2017 ஆம் ஆண்டில் மொறகஹகந்த சுற்றுலா விடுதி மற்றும் பார்வையாளர் மேடை என்பவற்றின் நிர்மாணங்களுக்காக உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றுக்கான இடைக்காலக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போது பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக செயற்பட்டமையால் கம்பனிக்கு ரூபா 20,200,000 ஆன நட்டமொன்று ஏற்பட்டது. 2019 பெப்ரவரி 21 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் போது இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று நடாத்தப்பட்டு ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு அறிக்கையிடுமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், அப்பரிந்துரை செயற்படுத்தப்படவில்லை என்பதுடன் கணக்காய்வுத் திகதியான 2023 யூலை 17 வரை குறிப்பிட்ட நட்டத்தை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக செயற்பட்டதாக அவதானிக்கப்பட்டுள்ள தலைவர் தற்போது மரணித்து விட்டதால் இத் தொகையை அறவிடுவது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு சட்டப்பிரிவின் ஆலோசனை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நடவடிக்கை கோரப்பட்டுள்ளது. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குறைந்தபட்சம் 2 மற்றும் அதிக பட்சம் 7 ஆன கம்பனியின் பணிப்பாளர் சபையின் அமைப்பு தொடர்பாக குறிப்பிட்ட ஏற்பாடுகள் அமைப்பு அகவிதியில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் இருந்த இக் கம்பனி அதன் செயலாற்றல் மோசமான நிலையில் காணப்பட்டதால், அமைச்சரவை மற்றும் சனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. | கம்பனியின் பணிப்பாளர் சபை அமைப்பு காணப்பட வேண்டிய முறை மற்றும் அவர்களின் நியமனம் தொடர்பாக குறிப்பிட்ட ஏற்பாடுகள் அமைப்பு அகவிதியில உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்தின் 13(18) ஆம் பந்தியின் பிரகாரம் துணைக் கம்பனியாக நிறுவப்பட்ட வ.்.ப மகாவலி கன்சல்ரன்ஸி பியூரோ (தனியார்) கம்பனியில் காணப்பட்ட அனைத்து நிதி மற்றும் பௌதீகச் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பதவியணி மற்றும் ஒப்பந்த ஆலொசனை சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் விவசாய கிராமிய, பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிப்பதற்கு 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதிய අමප/19/2770/104/083 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் 2020 திசெம்பர் 30 ஆம் திகதி ரூபா 10 வீதம் 6385 பங்குகளுக்கான ரூபா 63,850 பங்கு மூலதனம் நீர்ப்பாசன அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிமையை கையளிப்பது தொடர்பான தகவல்கள் நாளது வரையாக்கப்படாது கம்பனி இலங்கை மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ள கம்பனியொன்றாக விரைவில் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கம்பனியின் நிதக்கூற்றுக்களில் கொள்கைகள் மற்றும் குறிப்பு இலக்கம் 3.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | கம்பனியின் பங்குரிமை மாறுபட்டமை தொடர்பான தகவல்கள் கணக்கீட்டு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கனோவலி அணை நிர்மாணத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட எஞ்சிய இரும்பு இருப்பு தற்போதைய சந்தை விலைக்கு விற்பனை செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டு டென்டர் நடைமுறைகளை பின்பற்றுமாறு பணிப்பாளர் சபை அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. எனினும், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கம்பனியின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த இருப்பு டென்டர் நடைமுறைகளைப் பின்பற்றாமல் நீர்ப்பாசன அமைச்சிற்கு ரூபா 2,265,994 ஆன தொகைக்கு விற்பனை | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். அப்பொருள் சந்தையில் நாளுக்கு நாள் விலை ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுவதால் தற்போது விலை மனுக்களை கோருவதில் நடைமுறைச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தமை மற்றும் ஏல நடைமுறையில் அரசிற்கு அதிக இலாபம் தரும் வகையில் அரச நிறுவனங்களுக்கு வாய்ப்பளித்தல் போன்ற காரணங்களால் இந்தக் கம்பிகள் இருப்பு நீர்ப்பாசன | பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு முரணாக செயற்பட்டமை தொடர்பாக உரிய குழு பொறுப்பேற்க வேண்டுமென அவதானிக்கப்பட்டுள்ளமையால், அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. | திணைக்களத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட கிரயத்தை விட அதிக பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டது. | |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மதியுரைப் பணிகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | நீர்ப்பாசன அமைச்சின் மூலம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட கிங் நில்வள மாற்றுச் செயற்திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிப்பதற்கான மதியுரைப் பணி அந்த அமைச்சினால் 2017 ஏப்ரல் 28 ஆம் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிட்ட பணி 09 மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 யூலை 17 வரையில் அப்பணி முடிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. அமைச்சுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் 2.6 பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் தொடர்பாகக வாடிக்கையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், கம்பனியுடன் ஒப்பந்தம் செய்துள்ள ஆலோசகர்கள் 2021 யூலை 20 முதல் வெளியேறியமையால் புதிய ஆலோசகர்கள் 7 பேர் நியமிக்கப்பட்ட போது அதற்காக வாடிக்கையாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | நிறுவனத்தின் சர்ச்சைக்குரிய நிலைமையால் நிறுவனத்தை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டபோது இச் செயற் திட்டத்திற்காக நுஐயு அறிக்கையின் பணி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2021 கம்பனியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.<br><br>இவ்வளவு பெரிய செயற்திட்டத்திற்கான பணிகளை முடிப்பதற்கு 09 மாத காலப் பகுதியொன்று போதாமையால் செயற்திட்டத்திற்கான நீட்டிப்பு 2023 சனவரி 31 வரை சேவை நிறுவனத்திடமிருந்து (நீர்ப்பாசன அமைச்சு) பெறப்பட்டது.கிங் நில்வள செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட போது ஏற்பட்ட நெருக்கடி நிலைமை மற்றும் அதற்காக ஏற்பட்ட சமூக தாக்கம் மற்றும் செயற்திட்டத்தில் காணப்பட்ட சிக்கலான தன்மை காரணமாக 2017 இல் இந்த நுஐயு அறிக்கை தயாரிப்பதற்காக பணியமர்த்தப்பட்ட ஆலோசகர்கள் குழு இராஜினாமா செய்த காரணத்தினால், எமது நிறுவனத்தால் இச் செயற்திட்டத்தை தொடர்வதற்காக புதிய ஆலோசகர்களை ஆட்சேர்ப்பதற்காக அவர்களின் உயிரியல் தரவு அறிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அங்கீகாரத்திற்காக 2021 யூன் 07 ஆம் திகதி எமது கடிதம், செயற்திட்டத்திற்கு | ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை முடிப்பதற்கும், தேவையான போது உரிய முறையில் நீட்டிப்புக்களைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் மதியுரை பணிகளுடன் தொடர்பான சேவை முன்மொழிவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவின் மாற்றங்களுக்காக வடிக்கையாளரின் முறையான அனுமதியொன்று பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 யூலை 01 ஆம் திகதிய எமது கடிதத்தில் இது தொடர்பாக மீள் விசாரணையொன்றும் செய்யப்பட்டுள்ளது.<br><br>எனினும் 2021 நவம்பர் 16 ஆம் திகதி நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்ட, அனைத்து தரவுகளுடன் புதிய நிதி முன்மொழிவிற்கு (சநஎளைநன கயெஒயைட ிசழிழளயட) 2022 பெப்ரவரி 9 ஆம் திகதிய நீர்ப்பாசன அமைச்சின் கடிதத்தில் அவர்களின் அங்கீகாரம் எமக்கு வழங்கப்பட்டிருந்தது. | |
| (ii) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் செயற்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்ட நிலத்தடி நீர்த்தேக்கச் செயற்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிப்பதற்கான மதியுரைப் பணி 2021 மார்ச் 01 ஆம் திகதி ரூபா 6,147,555 தொகைக்கு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிட்ட பணி 2021 ஆகஸ்ட் 27 ஆம் திகதி முடிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2023 யூலை 17 வரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை. வரைவு அறிக்கையில் சேர்க்கப்படாத 08 விடயங்கள் சேர்க்கப்பட்டு மேலதிக அறிக்கையொன்று சமாப்பிக்குமாறு வாடிக்கையாளரால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2023 யூலை 17 வரையில் அம் மேலதிக அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. ஒப்பந்தத்தை முடிப்பதற்காக 491 நாட்கள் கால நீட்டிப்பு வாடிக்கையாளரினால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தும், கம்பனி ஆலோசகர்களுக்கு வழங்கியிருந்த ஒன்றறை வருட செல்லுபடியாகும் காலத்தை பொருத்தமான வகையில் | நிலத்தடி நீர்த்தேக்கச் செயற்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பீட்டின் இறுதி அறிக்கை தயாரிப்பது தொடர்பான 10 சதவீதம் ஆன பணிகள் மட்டுமே இன்னும் செய்யப்படுவதற்கு மீதியாக உள்ளதுடன் மிகுதி 90 சதவீதம் ஆன பணிகள் நிறைவடைந்துள்ளன. மத்திய சுற்றாடல் அதிகார சபை (ஊநுயு) வழங்கிய வுநஉாநைஉயட சுநஎநைற ஊழஅஅவைவநந ஊழஅஅநவெள இற்கான பதில்களுடன் மேலதிக அறிக்கை (யுனனநனெரஅ) வழங்குவது மட்டுமே இந்த 10 சதவீதம் பகுதிக்கு உரியதாகும். இதற்காக, பாதிக்கப்பட்ட குடும்பங்களை குடியேற்றுவதற்கு தேவையான காணிகளை கண்டறிந்து மற்றும் காணிகளை கையகப்படுத்துவதற்கு உரிமையாளர்களின் விருப்புக் கடிதங்கள் சமர்ப்பிக்கப்படுதலானது றேுளுனுடீ இனால் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதுடன், இன்னும் அப்பணி மேற்கொள்ளப் படாமையால் குறிப்பிட்ட மேலதிக அறிக்கையை நிறைவு செய்வதற்கு முடியவில்லை. நிலத்தடி நீர்த்தேக்கச் செயற்திட்டத்தின் சுற்றுச்சூழல் அறிக்கைளை தயாரிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையானது விடயத் தீர்மான பத்திரத்திற்கான | ஒப்பந்தப் பிரகாரம் பொறுப்பேற்கப்பட்ட மதியுரைப் பணிகள் குறிப்பிட்ட திகதியில் முடிக்கப்பட வேண்டியுள்ளதுடன் அவ்வப்போது மேற்கொள்ளப் படுகின்ற மாற்றங்களுக்கான ஆவணங்கள் திருத்தம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நீட்டிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயற்திட்ட அங்கீகாரத்திற்கான நிறுவனமாக இருப்பதுடன் அது எமக்கு குறிப்பிட்ட செயற்திட்ட முன்மொழிவாளரான றேளுனுடீ இனால் வழங்கப்படுகின்றது. குறிப்பிட்ட கால எல்லையை நீட்டிப்பது தொடர்புடைய செயற்திட்ட முன்மொழிவாளரால் செய்யப்பட வேண்டும். | |
| (ஆ) | பொறுப்பேற்கப்பட்ட பணிகள் முடிக்கப்பட்டிருந்த மூன்று நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,898,733 ஆன ஒப்பந்த பிடிகாசு குறித்த காலத்தில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | குறிப்பிட்ட கால எல்லைக்குள் பெறப்பட வேண்டிய பிடிகாசு தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மதியுரைச் செயற்திட்டங்களுக்காக 2022 திசெம்பர் 30 ஆம் திகதி ரூபா 2,846,300 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 07 லப்டொப் கணனிகள் 2023 மே 02 ஆம் திகதி கம்பனியின் ஆலோசகர்களுக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அவை முறையான வகையில் கையளிக்கப்படுவதற்கு மற்றும் பொருட் கணிப்பீட்டின் மூலம் இருப்பு உறுதிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | கம்பனியின் சொத்துக்கள் பயன்பாட்டிற்காக கையளிக்கப்படும் போது முறையாக கையளிக்கப்படுவதற்கும் அவற்றின் இருப்பு வருடாந்தம் பொருட் கணிப்பீட்டின் மூலம் உறுதி செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொறியியல் சேவையின் சிவில் பொறியியலாளராக அரச சேவைகள் ஆணைக்குழு செயலாளரால் நியமிக்கப்பட்டிருந்த நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு) பதவியை வகிக்கும் அதிகாரி கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினராக அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி நீர்ப்பான அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டிருந்தார். குறிப்பிட்ட | இலங்கை மகாவலி அதிகார சபையின் உரிமையின் கீழ் காணப்பட்ட அமைச்சிற்கு கொண்டு செல்வதற்கு முன்மொழியப்பட்டு, இக் கம்பனியின் செயலாற்றல் மற்றும் உற்பத்தித் திறனையும் உயர் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு அதற்கு பொருத்தமான அதிகரியொருவர் அமைச்சின் செயலாளருக்கு, கௌரவ அமைச்சருக்கு மற்றும் கௌரவ சனாதிபதிக்கு தேவைப்பட்டது. அதில் குறித்த அதிகாரியின் உகந்த ஆதரவைக் கருத்திற் கொண்டு | இவ்வாறான நியமனங்களுக்கு நியமன அதிகாரியின் முறையான அங்கீகாரமொன்று பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளதுடன் மேலும் பதவி, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொடுப்பனவுகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் அதிகாரியின் நியமனம் முழு நேரமா அல்லது பகுதி நேரமா என்பது தெளிவாகக் குறிப்பிடப்படாததுடன், அவரின் கொடுப்பனவாக 2016 எப்ரல் 25 ஆம் திகதிய 02.∴2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட முகாமைத்துவ பதவிக்கு உரிய ரூபா 98,215 ஆன சம்பளம் மற்றும் 05 வருடங்களுக்கான ரூபா 13,500 ஆன சம்பள அதிகரிப்பிற்கு உட்பட்ட சம்பளம் உட்பட ஏனைய கொடுப்பனவுகளும் உள்ளடங்கலாக ரூபா 52,342 வீதம் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவுகளாக 2023 ஒக்டோபர் 31 வரை மொத்தம் ரூபா 1,977,355 செலுத்தப்பட்டிருந்தது. | உரிய அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களின் பிரகாரம், அவர் பிரதான நிறைவேற்று அதிகாரிப் பதவியில் இடைக்கால அடிப்படையில் பணியமர்த்தப்பட்டதுடன் அவர் திருப்திகரமான சேவைக்கு பங்களிப்புச் செய்தமையால் பணிப்பாளர் குழுவினால் அவரின் சேவை நிரந்தரமாக்கப்பட்டது.<br><br>அரச சேவையில், அரச சேவை நியமங்களின் பிரகாரம், அரசினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற கொள்கைப் பணிகளுக்கு துணை நிற்க வேண்டியுள்ளதுடன் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற அரசிற்கான சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படுதல் தொடர்பாக கடிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு தொடர்புடைய சட்டப் பிண்ணனி தீர்மானிக்கப்படல் வேண்டும்.<br><br>கொடுப்பனவுகள் செலுத்தப்படும் போது அறிவியல் முறைமையின் அடிப்படையில் பணிப்பாளர் சபை தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த சுற்றறிக்கை விடயங்களை அப்படியே பயன்படுத்தக் கூடாது. அறிவியல் அடிப்படையொன்றை உருவாக்கி கட்டணமொன்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே அதற்காக அடிப்படையாக கொண்ட சுற்றறிக்கைகளில் உள்ள ஏனைய விடயங்கள் இதற்கு பயன்படுத்த முடியாதிருப்பதுடன், ஆயசமநவ எயடரந மதிப்பொன்றினை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட ஆதாரம் ஒன்றாகக் கருதப்படல் வேண்டும். | அங்கீகரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளராக (சட்டம்) கடமையாற்றிய அதிகாரி கம்பனி செயலாளர் ∴ சட்ட அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட அதிகாரி இலங்கை மகாவலி அதிகார | நியமனக் கடிதத்தில் கொடுப்பனவுகள் செலுத்தப்படும் முறை மற்றும் நியமனத்தின் அடிப்படை நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. என்றாலும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை | பதவியணி, ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொடுப்பனவு கட்டமைப்பு என்பவற்றுக்காக முகாமைத்துவ சேவைகளின் |

சபையிலிருந்து விடுவிக்கப்படாததுடன் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் தன்மை, கொடுப்பனவு செலுத்தப்படும் முறை மற்றும் ஏனைய நியமன நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02.∴.2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்படி பதவிக்கான ரூபா 55,925 ஆன சம்பளம் மற்றும் 05 வருடங்களுக்கான ரூபா 6,875 ஆன சம்பள அதிகரிப்பு போன்றவை உட்பட ஏனைய கொடுப்பனவுகளும் உள்ளடங்கலாக ரூபா 33,700 வீதம் கொடுப்பனவொன்று திறைசேரியின் அங்கீகாரம் இன்றி மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது.

தீர்மானப் பத்திரத்தில் ஒவ்வொரு அதிகாரியும் நியமிக்கப்பட்ட முறைமை தொடர்பான விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை கருத்திற் கொண்டு குறிப்பிட்ட பதவிக்கான நிபந்தனை மற்றும் பொறுப்புகள் எதிர்காலத்தில் தயாரிக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்ட ஆஊடீ நிறுவனத்திற்கு உரிய ழுநசயவழைெ ஆயரெயட இல் தொடர்பான செயற்பாடுகளை சேர்ப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

ஆஊடீ நிறுவனத்தின் தாய் கம்பனியாக இலங்கை மகாவலி அதிகார சபை இருப்பதால், அது நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டு வரப்படும் போது மகாவலி அதிகார சபையின் அமைச்சாக இருப்பது நீர்ப்பாசன அமைச்சு என்பதுடன் , குறிப்பிட்ட கடமைகள் கையளிப்பு அமைச்சின் செயலாளரால் மேற்கொள்ளப்படுவதா லும், ஒட்டுமொத்த உள்ளகக் கட்டுப்பாட்டிற்கு இணங்குவதாலும், அங்கீகாரம் கிடைதத்தாகக் கருதப்படல் முடியும். மேலும் இப் பணியமர்த்தல் தாபனக் கோவையின், நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் தனியார் நிறுவனத்திற்கு சேவையை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிய பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட சேவைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

அங்கீகாரம் பெறப்படுவதற்கும், நியமணம் மேற்கொள்ளப்படும் போது நியமனத்தின் தன்மை, நியமனத்தின் அடிப்படை மற்றும் கொடுப்பனவு செலுத்தப்படும் முறைகள் போன்ற அடிப்படை விடயங்கள் சேர்க்கப்பட்டு முறையான நியமனக் கடிதமொன்று வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு முரணாக கொடுப்பனவுகளைச் செலுத்திய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.